IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 212/2012
Deposition of witness for DW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மூர்த்தி | Caste | : - |
| Father Name | : முருகேசன் | Calling | : – |
| Village | : சேவூர் | Religion | : |
| Town | : காட்பாடி தாலுக்கா | Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of January, 2025.

Cross Examination:

1. நான் தாக்கல் செய்த அ.வ.எண்.211/2012 ல் பிரதிவாதிகள் யார்யார் என்றால் ராஜா மற்றும் மஞ்சுளா மீது தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு சொத்தின் சர்வே எண்.166/6 மற்றும் இதர சர்வே எண்கள் எனக்கு தற்போது ஞாபகமில்லை. மேற்படி வழக்கு சொத்துக்களின் விஸ்தீரணம் தெரியாது. தற்போது கவனமில்லை. வழக்கு தாக்கல் செய்து 12 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை.

2. எனது பிரமாண வாக்குமூல சங்கதிகளை நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். பிரமாண வாக்குமூலத்தில் என்ன பரிகாரம் கேட்டு அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாக்கல் செய்து பல மாதங்கள் ஆகிவிட்டது. எனது பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளும் எனக்கு ஞாபகமில்லை என்றால் ஆம். தாக்கல் செய்து பல மாதங்கள் ஆகிவிட்டது.

3. நான் தாக்கல் செய்த வழக்கில் கண்ட சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் மகன் சூர்யாவிற்கு பாத்தியப்பட்டது. என்

அப்பா முருகேசன் எனது மகனுக்கு உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி சொத்து எவ்வாறு என் அப்பா முருகேசனுக்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பாவின் அம்மா முத்தாலம்மாளுக்கு அவரே தாய் வழி மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து. எனது கூற்றுப்படி என் அப்பா அவருடைய சுய சம்பாதிய சொத்தை என் மகனுக்கு உயில் எழுதவில்லை என்றால் சரிதான்.

4. என் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் என்றால் இல்லை. ஒரு மனைவிதான். அவர் என் அம்மா. என் அப்பாவின் முதல் மனைவி ராணியம்மாள் என்றும், என் அம்மா சுலோட்சனா என் அப்பாவிற்கு இரண்டாவது மனைவி என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ராணியம்மாள் யார் என்றே எனக்கு தெரியாது.

5. மேற்படி ராணியம்மாளின் பிள்ளைகள்தான் இவ்வழக்கின் வாதிகளாகிய மஞ்சுளாவும் ராஜாவும் என்றால் அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில்தான் நான் அவர்களை முதலில் பார்த்தேன். வழக்கு சொத்துக்களை அபகரிக்க வேண்டி என் அப்பாவின் முதல் மனைவி மற்றும் அவர்களது பிள்ளைகளின் விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் என்ன பரிகாரம் கோரி அ.வ.எண்.211/2012 யை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் மீது அ.வ.எண்.212/2012 தாக்கல் செய்யப்பட்டதால் அவர்கள் மீது நான் அ.வ.எண்.211/2012 யை சொத்து என்னுடையதுதான் என கூறி தாக்கல் செய்தேன். எதனால் பிரதிவாதிகள் மீது சொத்து என்னுடையதுதான் என்று பரிகாரம் கோரி வழக்கு போட்டேன்

என்றால் என்னுடைய சொத்தில் சம்மந்தமே இல்லாத இவ்வழக்கின் வாதிகள் பிரச்சனை செய்ததால் வழக்கு போட்டேன்.

7. என் மீது இவ்வழக்கின் வாதிகள் வழக்கு சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்தார்கள். என் அப்பாவின் முதல் மனைவியின் சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில்தான் வாதிகள் வழக்கு சொத்தில் பாகம் கோரி எங்கள்மீது வழக்கு போட்டுள்ளனர் என்றால் சரியல்ல. என் அப்பா முருகேசனுக்கு எடப்பாளையத்தில் சொத்து உள்ளது அவர் அங்கு வசித்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு சேவூர் கிராமத்திலும் சொத்து இருந்ததால் அங்கு சென்றுவிட்டார்.

8. என் அப்பா எடப்பாளையத்தில் வசித்து வந்து அவர் இறக்கும் போதுதான் சேவூர் கிராமத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. எங்களுடன்தான் சேவூரில் 12 வருடங்களாக வசித்து வந்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை.

9. தற்போது என்னிடம் படித்துக்காட்டப்படும் வா.சா.ஆ.8 ஆன தமிழ்நாடு விவசாய தொழிலாளர்கள்–விவசாயிகள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் 2006 என்ற ஆவணத்தில் இவ்வழக்கில் 2ம் வாதி ராஜா பெயரிலான உறுப்பினர் அடையாள அட்டையின் குடும்ப உறுப்பினர்களில் அப்பா என்று முருகேசன் என்ற பெயரும் மேற்படி ராஜாவின் மனைவி மற்றும் இரண்டு மகன்கள் பெயர்களும் குறிப்பிட்டு காட்பாடி சமூக பாதுகாப்புத்திட்ட வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

10. அதேபோல் வா.சா.ஆ.14 ல் 2ம் வாதி ராஜா பெயரிலான குடும்ப அட்டையில் குடும்ப உறுப்பினர்களில் முருகேசன் என்ற பெயரும் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.9 – 2ம் வாதி ராஜாவின் திருமண அழைப்பிதழில் அவரின் தந்தை என்று முருகேசன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் வாதிக்கு திருமணத்தை அவரின் அப்பா முருகேசன்தான் நடத்தி வைத்தார் என்றால் நடத்தவில்லை என்று சாட்சி கூறிவிட்டு தற்பொழுது மாற்றி அதுபற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார்.

11. வா.சா.ஆ.10 – 2ம் வாதி ராஜாவின் வாக்காளர் அடையாள அட்டையில் தகப்பனார் பெயர் என்ற இடத்தில் முருகேசன் என்று குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 – புகார் மனு ஏற்பு ரசீதிலும் 2ம் வாதி ராஜாவின் தந்தை என்று முருகேசன் பெயர் குறிப்பிட்டு லத்தேரி காவல் நிலையத்தாரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

12. மேற்படி ரசீது 2ம் வாதி என் மீது கடலைச் செடிகளை பிடுங்கிவிட்டதாக புகார் கொடுத்ததற்கானது என்றால் என் மீது கொடுக்கப்பட்ட பொய் புகார் ஆகும். மேற்படி புகார் சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். காவல் நிலையத்தார் உரிமையியல் சம்மந்தமான பிரச்சனை என்பதால் சண்டையிடக்கூடாது என்றும் உரிமையியல் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் பெற்றுக்கொள்ள எங்களை அறிவுறுத்தினர் என்றால் சரிதான்.

(வாதிகளின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

(Sd/-)..K.Venkatesan
DISTRICT MUNSIF
KATPADI